12th March 1959]

Sri A. GOVINDASAMY : நாட்டிலுள்ள மக்களுக்கும் சொத்துக்கும் பாதுகாப்பாக இருக்கிற போலீஸ்காரர்களை காவல்காரர்கள் என்று சொல்வது தவருக இருக்கிறது. அதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : காவல்காரர்கள் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல. போலீஸ்காரர்கள் மட்டும் காவல் காரர்கள் என்பது அல்ல. காவல்காரர்கள் என்ருல் போலீஸ்காரர்களை மட்டும்தான் குறிக்கும் என்பது அல்ல.

Construction of an anicut across Marudhiar

* 745 *Q.*—Sri M. A. B. ARUMUGHASAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the action taken on the mahazar, dated 29th March 1957, presented to the Government by the public of Davarappanpatty, hamlet of Ayampalayam village, Dindigul taluk, Madurai district, regarding the construction of an anicut across the river Marudhiar for purposes of irrigation?

The Hon. Sri P. KAKKAN : The matter has been referred to the Chief Engineer for Irrigation. His final report is awaited.

Hindu Religious and Charitable Endowments Act, 1951

* 746 *Q.*—Sri N. S. RAMALINGAM (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal before the Government to amend the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1951, for enabling new trustees appointed by the "Area Committees" to take immediate charge of the respective trust properties from the removed trustees?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

Loans for digging wells

*747 *Q.*—Sri P. S. SANTHANAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் ஏழை விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்கு என்று 1958–59 வருடங்களுக்கு என எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) வடாற்காடு ஜில்லாவுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) இவற்றில் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டது ?

(ஈ) தொகை வாங்கியும் கிணற்று வேலையை பூர்த்தி செய்யாதவர்கள் எத்தனை பேர் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 10 lakhs.

(*b*) Rs. 1·5 lakhs.

(*c*) The Collectors have been instructed to inquire into the applications received and complete the enquiry before 15th February 1959. Disbursement of loans will take place after that date. Information as to the number of persons to whom loans have been actually disbursed will be known only later.

(*d*) Does not arise.

[12th March 1959

SRI P. S. SANTHANAM: வட ஆற்காடு ஜில்லாவுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் அம்மாதிரி கொடுக்கப்படாமல் இருந்தால் அதை உடனடியாகக் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம்மாதிரி இல்லாததோடு அல்ல. இன்னும் 25,000 ரூபாய் கொடுத்து 50 கிணறுகள் வெட்டுவதற்கும் இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

SRI V. SUBBIAH: இந்த வருஷத்தில் அம்மாதிரி குடி தண்ணீர் அல்லது நீர்பாசன வசதிக்கு என்று வெட்டப்படும் கிணறுகளை வெட்டும்போது பஞ்சப் பிரதேசமாகவும், வரண்டப் பிரதேசமாகவும் இருக்கக்கூடிய இடங்களுக்கு முதலிடம் கொடுக்க முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது நீர்பாசனத்திற்கு வேண்டிய கிணறுகள் வெட்டப்படுகின்றன. எங்கே அத்தியாவசியம் ஏற்படுகிறதோ அந்த மாவட்டங்களில் வெட்டப்படுகின்றன. எங்கேயெல்லாம் நீர்பாசனத்திற்கு தண்ணீர் இல்லாமல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் கிணறுகள் வெட்டும் திட்டம் துரிதமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் எண்ணம்.

SRI S. M. ANNAMALAI: கிணறுகள் வெட்டுவதற்காக பணம் கொடுக்கும்போது பத்து ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் பணம் உள்ளவர்களுக்கும்தான் பணம் கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு ஏன் கொடுக்கப்படுவது இல்லை என்று கேட்டால் சரியாக விண்ணப்பங்கள் வரவில்லை என்று அதிகாரிகள் சொல்லி விடுகிறார்கள். சரியாகவும் விளம்பரம் செய்வதும் இல்லை. ஆகையால் இரண்டு ஏக்கர் முதற்கொண்டு ஐந்து ஏக்கர் வரையில் வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கும் பணம் தர வேண்டும் என்ற உத்தரவை சர்க்கார் போடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம்மாதிரி ஐந்து ஏக்கருக்கு உட்பட்டவர்களுக்கு பணம் கொடுக்கப்படுவதில்லை என்ற தகவல் எனக்கு இதுவரையிலும் வரவில்லை. கனம் அங்கத்தினர் அதைப்பற்றிய தகவல் கொடுத்தால் அதில் கவனம் செலுத்தவேண்டிய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளுகிறேன்.

Residential quarters for N.G.Os.

* 748-A *Q*.—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. Sarathi): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் N.G.O.-க்களுக்கு குடியிருக்க எவ்வளவு அரசாங்கத்தாரால் கட்டப்பட்ட வீடுகள் உள்ளன ?

(ஆ) புதிதாக இந்த ஆண்டு எத்தனை வீடுகள் கட்டப்படும் ?

(இ) அரசாங்க வீடுகளில் குடியிருப்பவர்களிடம் வாடகை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது ?

THE HON. SRI P. KAKKAN: (*a*) 1,944 including 1,355 for the police subordinate staff.

(*b*) A scheme for the construction of 300 houses for the workers of the Government Press, Madras, spread over a period of three years has been sanctioned and taken on hand. But it is unlikely that any house will be completed during the current financial year.